முருகப்பெருமான் துணை

**மகான் ராகு பகவான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.12.2023**, புதன்கிழமை

1. அருளமுது வழங்கிடும் அரங்கனே
அண்ணலே ஞான தேசிகனே
வரமென சோபகிருது தேள்திங்கள்
வல்லமைபட இருபானேழ்திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 27 ம் நாள், 13.12.2023, புதன்கிழமை)
2. வாரமதில் ராகுபகவான் யானும்
வையகம் வளம்பெற உரைப்பேன்
சோரமில்லா அறிவுரை ஆசிதன்னை
செகமதில் அரங்கன் கேட்க உரைப்பேன்
3. உரைக்கவே அரங்கன் தருமம்
உலகை மாற்றும் சக்தியாக
குறைவிலா வளர்ந்து வருக
குறிப்பாக தருமசாலைகள் பரவி
4. பரவியே மக்களிடை ஞானம்
பரோபகாரமகப் பெருகிவர
துறவி அரங்கன் காட்டுகின்ற
தூயதரும நெறி தேசமெங்கும்
5. தேசமெங்கும் மகாசக்தியாக நிரம்பி
தெரிவிப்பேன் ஞான பலமாகி
நேசமுள்ள அரங்கர் படைகள்
நிலவுலகில் ஞானப்படைகளாக மாறி
6. மாறியே அற்புதம் படைக்கும்
மண்ணுலகம் அரங்கன் விரும்பும்
ஆறுமுகனார் தலைமை ஏற்று
ஆற்றல்மிக்க ஞான ஆட்சி பெறும்

7. ஞான ஆட்சி தருகின்ற சக்தி
ஞானப்படைகளிடம் இருக்க
தானாக முன் வந்து உலகினில்
தரணியோர் அரங்கன் படைகளாக

8. ஆகவே சக்திதனை கூட்ட
அகிலம் எங்கும் நிரம்பிட
மகான்களாக மனிதர்களிடை
மாற்றம் கூடி கலியினில்

9. கலியினில் ஞானிகள் தானும்
கணக்கிடமுடியா வண்ணம் கூடி
அழியாமை பெற்ற மக்களாக
அனைவரும் தேறி சிறப்பர்

10. சிறப்பான நல்லாட்சி ஞான ஆட்சி
செகமெங்கும் கண்டிடவே
அறத்தோடு கூடிய வாழ்வாக
அனைவருக்கும் ஞானமருளும் அரங்கனே

11. அரங்கனே உகந்த ஞானகுரு
அடையாளம் மக்கள் கண்டு
வரங்கள் பெற அற்புதம் நிகழும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–